# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்: 05 கணை: 34 மார்ச் – 2025




Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

திரு. ஞா.கயூரன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**

gruseththiram@gmail.com



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


## உள்ளே...


காட்சியும் கருத்தும் 1

ஆசிரியர் பார்வையில்... 2

What is maturity of mind???? 3

சமூக மனவெழுச்சிக்கற்றல் – மாற்றத்திற்கான திறவுகோள்: 4

“இன்பா”வின் சிந்தனைத் தொடர் – 25 7

சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும் 8

பல கனவுகளை சுமந்தவளாய் நான் 11

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சர்வதேச புரிந்துணர்வுக்கும் குடியியல் கல்வியின் அவசியம் 13

Dhora ‘WIN’ வரிகள் 15

உயர்விற்கு அடிப்படை தாழ்மை 16

கலப்பு கற்றல் (Blended Learning) 17

வடக்கு மோனாலிசா 21

கதை வழி அற மொழி 23

பேசும் படங்கள் 25

# காட்சியும் கருத்தும்

கலாநிதி சு.பரமானந்தம்







# ஆசிரியர் பார்வையில்...

குருசேத்திரம் 34 ஆவது இதழுக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சத்தியம், அகிம்சை, நாகரீகம், பண்பாடு, கலாசாரம் போன்ற வார்த்தைகள் பொருளற்றுப் போய்விட்டனவா? அல்லது இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாத ஒருசமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கின்றதா? இவற்றிற்கெல்லாம் யார் காரணம்?........

நாகரீகத்தின் தொட்டிலாகக் காணப்பட்ட கிரேக்கத்தில் கிரேக்கத் தலைநகர் ஏதென்சில் பட்டப்பகலில் கையில் விளக்குடன் அறிஞர் டயோ டனிஸ் எதையோ தேடிக்கொண்டிருந்தார். என்ன தேடுகிறீர்கள் எனக் கேட்டபோது அவர் அமைதியாக மனிதனைத் தேடுகின்றேன் என்றார். இது ஒரு வரலாற்றுப் பாடம். மனிதநேயமும் பண்பாடும் குறைந்தபோது அவர் கூறிய வார்த்தைகள் தான் இவை.

இப்போது இது நமது நாட்டுக்கும் பொருந்தும். கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்புணர்வு, சிறுவர் துஸ்பிரயோகம், அரசியல் மோதல், தற்கொலைகள், விபத்துக்கள், இலஞ்சம், ஊழல்கள், மிரட்டல்கள், இவை இன்றைய பத்திரிகைகளை அலங்கரிக்கும் தலைப்புச் செய்திகள்.

ஒழுக்கத்தையும் பண்பாடுகளையும் போதிக்கும் அறிவாலயங்களில், கோஸ்டி மோதல், விளையாட்டுப் போட்டிகளில் வீண் சண்டை, போதைப்பொருள் பாவனை, புதிய மாணவர்களுக்கு பகிடிவதை என்ற ரீதயில் சித்திரவதை, தன்னைக் காதலிக்க மறுத்த பெண்ணிற்கு அசிட் வீச்சு, மணம் செய்ய மறுத்த பெண்ணுக்கு கத்திக்குத்து.. ஒழுங்காகப் படிக்கச் சொன்ன ஆசிரியருக்கு இருட்டடி, ஒழுக்கத்தை போதித்த பெரியோருக்கு கல்லெறி... பொதுச்சொத்துக்களுக்கு சேதம்....

சம காலத்தில் சமூக ஊடகங்களில் பல விடயங்கள் பேசு பொருளாகக் காணப்படுகின்றது. தனிமனித நடத்தைக் கோலங்கள் ஒரு சிலரின் பொருளாதார மற்றும் தன்னிலை இருப்புக்கான அல்லது புகழுக்கான முயற்சிகளாகக் காணப்படுகின்றன. இவற்றைப் பார்க்கும் போது எமது எதிர்கால சிறார்களின் எதிர்காலம், இவர்களின் இருப்பு, கல்வி, உயர்கல்வி வாய்ப்புக்கள் மற்றும் சமூக அந்தஸ்து தொடர்பாக உரத்து சிந்திக்க வேண்டிய தேவை முன்னெழுகின்றது.

சமூக ஊடகங்களின் தாக்கம் எதைப்பற்றியும் எவரும் எவ்விடத்திலும் பதிவிடலாம் அல்லது பேசலாம் என்ற நிலை எதிர்காலத்தில் சமூக, பரஸ்பர நம்பிக்கையை இழக்கச் செய்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துமோ என்ற பயம் வியாபித்து வருவதையும் காணலாம். பிரச்சினைக்கான தீர்வு வன்முறை மூலமே காணலாம் என்ற போக்குகளும் அதிகரித்து வருகின்றது. இதில் கவலைக்குரிய விடயமென்றால் நாட்டின் அதி உயர் சபையிலும் சமூகத்திற்கு வேண்டத்தகாத வார்த்தைப் பிரயோகங்கள் தாராளமாக பயன்படுத்தப்பட்டு வருவதையும் உரத்துப்பேசினால்தான் "தேசியம்" என்ற சிந்தனையும் வெளிப் படுத்தப்படுகின்றது.

நாங்களும் தேடுவோம்.....

எதைத் தேடுவது? அரிச்சந்திரன் போதித்த சத்தியத்தை, மகாத்மகாந்தி வாழ்ந்துகாட்டிய அகிம்சையை, இனங்கள், மதங்கள் போற்றிய பண்பாடுகளை, கலாசாரத்தை விழுமியங்களை…

எங்கு தேடுவது?

இவற்றிற்கெல்லாம் காரணம்.... எமது மனங்களே… 'யுத்தம் ஏற்படுவது மனித மனங்களுக்குள்ளேயாகும். அதனால் சமாதான

வேலி கட்டவேண்டியதும் மனித மனங்களுக்குள்ளேயாகும்' என்பது யுனெஸ்கோவின் வாக்கியம் அதாவது முரன்பாடுகளின் தோற்றம் தனிமனிதனுக்குள்ளே, மனச்சாட்சிக்கும் - கடமைக்கும் இடையே அல்லது எதிர்பார்ப்பிற்கும் விளைவிற்குமிடையே... இவ்வாறான பல சந்தர்ப்பங்களில்...

பேராசிரியர் லிலியன்கடஸ் அவர்கள் "ஒவ்வொரு ஆசிரியரிடமும் பெற்றோரிடமும் சமூக உறுப்பினர்களிடமும் எல்லா பிள்ளைகள் பற்றிய கவனயீர்பும் அவசியமாகின்றது. ஏனெனில் ஒரு பிள்ளை தாக்கப்படுவதோ அல்லது இம்சைக்குள்ளாக்கப்படுவதோ இன்னுமொரு பிள்ளையினாலேயேதான். எனவே நல்ல சமூக வாழ்க்கை என்பது ஒவ்வாரு பிள்ளையின் சமூக மனவெழுச்சிப் பண்பிலேயே தங்கியுள்ளது. ஆகவே ஒவ்வொரு பிள்ளை பற்றிய சமூக-மனவெழுச்சி பற்றிய விழிப்புணர்வுகளும் மதிப்பீடும் வழிப்படுத்தலும் அவசியமாகின்றது" என்ற விடயத்தை உங்களின் சிந்தனைக்காக பதிவிடுகின்றேன்.

**எல்லோரும் நடந்த பாதையில் நீங்கள் நடக்காதீர்கள். மாறாக பாதைகளே இல்லாத இடத்தில் நடக்க முயலுங்கள். உங்கள் காலடித் தடம் மற்றவர்களுக்குப் பாதையாக அமையட்டும். ஆர்.சபிலோ போலஸ் கூறிய வார்த்தையை வலியுறுத்தி,**

**2025 ஆண்டு சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்து விடை பெறுகின்றேன்.**

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

என்றும் அன்புடன்,
**கலாநிதி.சு.பரமானந்தம்.**

## What is maturity of mind????

- Correcting ourselves without trying to correct others.
- Accepting others with their short comings.
- Understanding the opinions of others from their perspectives.
- Learning to leave what are to be avoided.
- Leaving the expectations from others.
- Doing whatever we do with peace of mind.
- Avoiding the prove our intelligence on others.
- Avoiding the status that others should accept our actions.
- Avoiding the comparisons of ourselves with others.
- Trying to keep our peace in our mind without worrying for anything.
- Understanding the difference between the basic needs and what we want.
- Reaching the status that happiness is not connected with material things.
- Respecting the feelings of others and not deceiving them.
- Not being arrogant and thinking that I am superior to others.

*- MS.Madhupriya Poopalan -*

# சமூக மனவெழுச்சிக்கற்றல் – மாற்றத்திற்கான திறவுகோள்:

- கலாநிதி சு.பரமானந்தம் -




மனவெழுச்சி யாவருக்கும் பொதுவானது. ஆனால் அதனை ஏற்படுத்தும் காரணிகள் வேறுபாடானவை, அதனை இல்லாமல் செய்வதற்கு முயற்சிப்பது நீண்டகால மெடுக்கும் என்பதால் அதனை முகாமை செய்து நல்ல விளைவு களை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துவதே இன்று நம்முன்னுள்ள பிரதான விடயமாகும். இவற்றிற்கு சிறந்த வழியாக நேர்வகையான சிந்தனை, நேர்வகை மனப்பாங்கு, இசைந்துடன்படும் தன்மை போன்றவை மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

இதனடிப்படையில் எதிர்காலத்திற்கான கல்வியாக சமூக மனவெழுச்சிக் கற்றல் என்பது கற்பவர்கள் தமது அடிப்படை சமூக மனவெழுச்சிப் பரிமாணங்களான சுய விழிப்புணர்வு, சுய முகாமை த்துவம், சமூக விழப்பணர்வு, தொடர்பாடல், படிமுறைத் தொடர்பு திறன், பொறுப்புக்கூறும் பண்பு மற்றும் தீர்மானமெடுத்தல் செயற் பாடுகள் போன்றவற்றின் செயன் முறைகளைக் குறிப்பிடலாம். இவை தவிர மனிதரிடையே காணப்படும் மனவெழுச்சிகளும் (Emotions) நமக்குள்ளே தோன்றும் உணர்வுகளும் கற்றலிலே பெரிதும் செல்லாக்குச் செலுத்துகின்றன. மனவெழுச்சிகளை 3 வகைக்குள் அடக்கலாம்.

1. **தன்னைப்பாதிக்கும் மனவெழுச்சிகள்**

   இவற்றைத் தன்மைய எழுச்சிகள் எனலாம். தன்மதிப்பு, சுயபாசம், அச்சம், சுயகௌரவம் சினம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

2. **பிறரைப்பாதிக்கும் மனவெழுச்சிகள்:**

   இரக்கம், அன்பு, நாட்டுப்பற்று, தோழமை நட்பு, பரிவுணர்வு போன்றவை இவ்வகையைச் சார்ந்தவை.

3. **சிந்தனை சார்ந்த மனவெழுச்சிகள்.**

   இவ் மனவெழுச்சிகள் தனியாளின் சூழ்நிலையையும் கல்வி யையும் பெரிதும் சார்ந்தவை. இவை தனிமனிதர்களுக்கிடையே மாறுபட்டுக் காணப்படும்.

## மனவெழுச்சிக்கான காரணங்கள்

### குலைவு ஆளுமை (Psychopathic Personality)

குலைவு ஆளுமை என்பது பல்வேறுவிதமான தனித்துவங் களையும், எதிர்ப்பண்புகளையும் விலகல் நடத்தைகளையும் கொண்டோர் இப்பிரிவினுள் அடங்குவர். திரிபடைந்த மனவெழுச் சிக்கோலங்கள் அவர்களிடத்தே அதிகமாக காணப்படுவதாக ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. தமது மனவெழுச்சிகளை தாமே கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுவர். அவர்களின் செயற்பாடுகளை எதிர்வுகூறமுடியாத நிலைகாணப்படும்.

மனவெழுச்சி தளம்பல் நிலையிலேயே காணப்படும். இவர்களின் இலக்கும் குறிக்கோளும் ஆற்றுகையும் தொடர்ந்து மாறிய வண்ணம் இருக்கும். எதுவித புறக்காரணமுமின்ற அகவயநிலையில் தமது தொழிற்பாடுகளை மாற்றியவண்ணமே காணப்படுவர். இவர்கள் சுயநலம் மிக்கவர்கள், தமது சுயநலத் திற்காக தமது அறிவாற்றலைப் பிரயோகிப்பவர்களாகக் காணப் படுவர்.

### மாற்றெழுகை வலயத்தின் அளவு (Zone of Indifferences)

மனவெழுச்சிக்கான இன்னொரு காரணியாக தனிமனிதரி டையே காணப்படும் மாற்றெழுகை வலயத்தைக் குறிப்பிடலாம். இதுவும் ஓர் உளவியற் பண்பாகக் காணப்பட்டாலும் தனியாள் களுக்கிடையே மாறுபாடான நிலை காணப்படும். இவர்கள் ஒரு விடயத்தில் பொறுப்புடன் செயற்படமாட்டார்கள். அதாவது ஏனோ தானோ என்று செயற்படுவார்கள். தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் மறந்து குறித்த நேரத்தை போக்கடிப்பதி லேயே குறியாகக் காணப்படுவார்கள். இவ்வாறானவர்களினால் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தமுடியாது போய்விடுகின்றது.

சமூக-மனவெழுச்சிக் கற்றல் (SEL) என்பது உணர்ச்சிகளை நிர்வகிக்கவும், நேர்மறையான உறவுகளை உருவாக்கவும், பொறுப்பான முடிவுகளை எடுக்கவும் திறன்களை வளர்க்கும் செயல்முறையாகும். இதில் ஐந்து முக்கிய கூறுகள் உள்ளன: அவை சுய விழிப்புணர்வு, சுய முகாமைத்துவம், சமூக விழிப்புணர்வு, தொடர்பாடல் திறன்கள் மற்றும் பொறுப்பான முடிவெடுத்தல் ஆகியனவாகும். சமூக-மனவெழுச்சிக் கற்றல், தனிநபர்கள், குறிப்பாக குழந்தைகள், மனவெழுச்சி நுண்ணறிவை மேம்படுத்த உதவுகிறது, இது சிறந்த மன ஆரோக்கியம், கல்வி செயல்திறன் மற்றும் சமூக தொடர்புகளுக்கு வழிவகுக்கிறது.

### சுய விழிப்புணர்வு

ஒருவர் தனது மனவெழுச்சிகளையும், விழுமியங்களையும் அறிந்துகொள்ளுதல். தனது இயலுமைகளையும், தடைகளையும் உணர்ந்து கொள்ளுதல் தான் பற்றிய சுய புலக்காட்சியைப் புரிந்துகொள்ளுதல் சுய வினைத்திறன் - சுயம் பற்றிய உணர்வுகள்.

### சமூக விழிப்புணர்வு

சுய சமூகவியல் நடத்தைகள் தொடர்பான ஒழுக்கவியல் கட்டுமானச் செயன்முறைகள், ஒத்துணர்வு, கேட்டல் திறன்கள், மாறுபட்ட ஊக்குவிக்கும் திறன்கள், நேர்வகை தொடர்பாடல்.

### தொடர்பாடல் திறன்கள்

உடன்பாடான தொடர்புகளை உருவாக்குதல், குழுவாகச் செயற்படுதல், வினைத்திறனுள்ள வகையில் கையாள்தல் தொடர்பு றுத்தல், கலந்துரையாடி முடிவுக்கு வருதல், முரண்பாடுகளை தீர்த்தல், நிராகரிக்கும் ஆற்றல், உதவிகளைப் பெற்றுக்கொள்ள லும் - வழங்குதலும்.

### தீர்மாணமெடுத்தலில் பொறுப்புடமை

பிரச்சினைகளை இனங்காணல் - சூழ்நிலைசார் பகுப்பாய்வு - பிரச்சினை தீரத்தல் - மதிப்பீடு - பிரதிபலிப்பு, சுய பொறுப்புணர்வு, விழுமியங்கள் சொடர்பான சமூக பொறுப்பணர்வு

### சுய முகாமைத்துவம்


இலக்கை அடைவதற்காக மனவெழுச்சிகளையும், நடத்தை களையும் முகாமை செய்தல். ஆசைகளைக் கட்டுப்படுத்தல், தகைப்பு, உணர்ச்சிவசப்படுதலை முகாமைசெய்தல், சுய ஊக்குவிப்பும், ஒழுக்கவியலும், இலக்கைத் திர்மானித்தல்

மனவெழுச்சியை ஒழுங்குபடுத்தல் அல்லது முகாமைத்துவம் செய்தல் என்பது ஒருவரின் ஆளுமையுடன் தொடர்புடையதாகும். அதற்கான முனைப்புக்களாக பின்வரும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகள் அவசியமாகும்.

- சமூக மனவெழுச்சித் திறன்களை உள்ளீர்த்தல்.
- தேவைகளை அங்கீகரித்தல் - ஏற்றுக்கொள்ளல்.
- நான் தனித்துவ ஆற்றல் மிக்கவர் என்ற உணர்வை வளர்த்தல்.
- நான் அழகானவர் என்ற உணர்வை வளர்த்தல்.
- நேர் சிந்தனைகளை ஏற்படுத்துதல்.
- சுய திறன்களைப் பாராட்டுதல், வெளிப்படுத்தல்.
- மற்றவர் கருத்துக்களைச் செவிமடுத்தல்.
- மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாமல் நடந்துகொள்ளல்.

மாற்றம் என்னிலிருந்தே ஆரம்பிக்கட்டும்.

மாணவர்களின் எதிர்காலமே அசிரியர்கள் தான். எதிர்கால தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம்தான் உள்ளது. ஆசிரியரின் அலட்சியப்போக்கு, கவலையீனம், சுயநலம், கருத்து முரண்பாடு, விதண்டாவாதம் இவை அனைத்தும் சமுதாயத்தை அழிக்கவே வழிகோலும் - எனவே மாற்றத்தை உங்கள் ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்துங்கள் அது நிச்சயம் ஒவ்வொருவரது வாழ்வையும் மற்றவர்களின் வாழ்வையும் வளப்படுத்தும்.



## "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 25

## கதைகளால் நியமாகி...

### வாழ்க்கைத்தத்துவம்

எடிசன் மின்சார பல்பை கண்டுபிடித்த பிறகு தன் நண்பர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அந்த பல்பை ஒளிர வைத்துக் காட்டுவதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார்.

அவரது ஆய்வகத்தின் மேல்தளத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றது. எடிசன் தன் உதவி யாளரை அழைத்து மின்சார பல்பை மேல்தளத்திற்கு கொண்டுவரச் சொன்னார். அந்த உதவியாளர் பல்பை கொண்டு வருகையில் அது கைத்தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந் தார்கள் உதவியாளரும் பதற்ற மடைந்தார்.



ஆனால் எடிசன் எந்த பதற்றமும் அடையவில்லை. ஆயிரம் தோல்விகளை சந்தித்து மின்சார பல்பை உருவாக்கியவருக்கு மீண்டும் ஒரு மின்சார பல்பை உருவாக்குவது மிகவும் எளிதாக இருந்தது.

சிறு முயற்சி செய்து மீண்டும் ஒரு பல்பை உருவாக்கினார். அதை மீண்டும் அதே உதவியாளரிடம் கொடுத்து மேலே கொண்டுவர செய்தார். பல்பை கீழே போட்டு உடைத்த அவரிடமே அதை மீண்டும் கொடுக்கின்றீர்களே என்று சிலர் ஆச்சரியப்பட்டு எடிசனிடம் கேட்டார்கள்.

அந்த பல்ப் மீண்டும் உடைந்தாலும் என்னால் இன்னொரு பல்பை உருவாக்க முடியும். ஆனால் என்னுடைய உதவியாளரின் மனதை உடைத்து விட்டால் அதை என்னால் மீண்டும் சரி செய்ய முடியுமா? முடியவே முடியாது! அதனால் தான் மீண்டும் அவரிடமே அதே பணியை கொடுத்தேன். அவர் அவரது பணிகளையும் பொறுப்புக்களையும் என்னுடைய நம்பிக்கையையும் நன்றாக உணர்ந்து மீண்டும் வேலை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார் எடிசன்.




அப்போதுதான் எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது. அந்தப் பொறுமையின் முக்கிய த்துவத்தை அங்கிருந்த அனை வரும் உணர்ந்தார்கள். எடிசன் ஆயிரம் முறை தோல்விகளை கண்டு ஒரு மின்சார பல்பை கண்டுபிடித்தார். அந்த பல்பை தனது உதவியாளரிடம் கை தவறி விழுந்து உடைத்ததற் காக எடிசன் திகைக்கவில்லை நொந்து போகவில்லை அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் கூட அமைதியாக நடந்து கொண்டார். நேர்மறை சிந்தனை உள்ள ஒரு அற்புதமான மனிதர் எடிசன்.

**நீதி - நேர்மறைச் சிந்தனையால் நல்ல மனிதர்களை உருவாக்கலாம்.**

**- T.இன்பதேவராஜா -**




# சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்க முடியாத வகையில் இலங்கையின் கல்விச் செயன்முறை நகர்கிறதா? அதனை சர்வதேச தரத்திற்கு இணையாக நகர்த்துவதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்களும் காத்திரமான செயன்முறைகளும்

1

- சட்டத்தரணி கி.புண்ணியமூர்த்தி -

## 1. இலங்கையின் கல்வி வரலாறு

இலங்கையின் நீண்ட கல்வி வரலாறானது இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்ததாகவுள்ளது. ஆசிரியர் வீடு, சிற்றூர்ப் பள்ளிகள் எனத் தொடங்கி பிரிவேனாக்களில் வழங்கப்பட்ட உயர் கல்வி வரை இலங்கையின் கல்வி வரலாறு விரிந்து செல்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் புலமைப்பரிசில் திட்டங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் அதன் விளைவாக, இலங்கையால் வளர்ந்தவர்களுக்கு 92% மற்றும் இளைஞர்களுக்கு 97% என்ற போற்றத்தக்க கல்வியறிவு விகிதத்தை அடைய முடிந்துள்ளது (மனித அபிவிருத்தி அறிக்கை, 2004). இது மூன்றாம் உலக நாடொன்றிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமானதாகும். இலங்கை, ஆசியாவில் மிகச் சிறந்த கல்வியறிவு சதவிகிதத்தைக் கொண்டுள்ளது.

நாட்டின் வாழ்க்கை முறை, சமூக பண்பாடு, பொருளாதாரம், கலை, கலாசாரம், தொழில்துறை எனப் பல பரிமாணங்களில் கல்வி செல்வாக்குச் செலுத்துகின்றது. நவீன கல்வி முறையின் வளர்ச்சி இலங்கை 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டபோது உதயம் பெற்றதாகக் கொள்ளமுடியும். தற்போது கல்வி முறையானது மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் கட்டுப்பாட்டின் கீழ் பரிபாலனம் செய்யப்படுகின்றது.

## 2. இலங்கையின் தற்போதைய கல்வி முறைமை

இலங்கையின் கல்வி முறைமையானது 13 வருட பாடசாலைக் கல்வியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது ஆரம்ப நிலை, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை மற்றும் கல்லூரி நிலை என நான்கு நிலைகளைக் கொண்டுள்ளது.

## 2.1 ஆரம்ப நிலைக் கலைத்திட்டம்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி 4 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வியைக் கட்டாயமாக் குதல் இச் சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஆரம்ப வகுப்புக்கள் முதல்நிலை 1,2,3 எனப் பாகுபடுத்தப்பட்டன அதற்கேற்ப முதல்நிலை 1 இல் வழிப்படுத்தப்பட்ட விளையாட் டுக்கள் அதிகமாகவும் மேசை வேலைகள் குறைவாகவும் காணப்படும். முதல் நிலை 2 இல் இரண்டும் சமமாகவும் முதல் நிலை 3 இல் வழிப்படுத்தப்பட்ட விளையாட்டுக்கள் குறைவாகவும் மேசை வேலைகள் அதிகமாகவும் காணப்படும். மேலும் ஆரம்பக் கல்வியில் தாய்மொழி, சமயம், கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய 4 பாடப் பரப்புக்களை ஒன்றிணைத்து, ஒன்றிணைந்த பாடக் கலைத்திட்டமே நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

## 2.2 இடைநிலைக் கலைத்திட்டம்

இடைநிலைக் கலைத் திட்டம், மாணவர்கள் தமது உயர் கல்வியையும், எதிர்காலத் தொழிலையும் திட்டமிட்டுக்கொள்ளத் தேவையான திறன்களை வழங்கும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளன. இலங்கையின் இடைநிலைக் கலைத்திட்டத்தின் மையப்பாடங்களாக முதன்மொழி, சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கில மொழி என்பனவும் விருப்பத்தெரிவுப் பாடங்களாக 03 தெரிவுப் பாடங்களும் உள்ளடங்குகின்றன. இந்த 3 பாடங்களும் மூன்று கூடைத் தொகுதிகளிலிருந்து ஒவ்வொன் றாகத் தெரிவுசெய்யப்படுகின்றன. இடைநிலைக் கலைத்திட்டத்தில்

- விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் வாரத்திற்கு 6 பாடவேளைகளைக் கொண்டுள்ளன.
- 21ம் நூற்றாண்டிற்கு மிகவும் அவசியமான தொழில் உலகில் பிரவேசிக்கத் தேவையான ஆங்கில மொழிக்கு வாரத்திற்கு 5 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- தொகுதி 1க்குரிய விருப்புப் பாடங்களில் பிற மொழிகளைக் கற்பதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றமை தொழில் உலகில் பிரவேசிக்க மாணவர்களுக்கு அடித்தளத்தை வழங்குகின்றது.
- மேலும் முதலாவது கூடைத் தொகுதியிலேயே குடியியல் கல்வி உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனூடாக 21ம் நூற்றாண் டிற்குரிய பல்வேறு மென்திறன்கள், ஜனநாயகப் பண்புகள், பூகோளப் பிரஜைக்குரிய பண்புகள் மற்றும் திறன்கள், மோதல் தவிர்ப்புத் திறன்கள், பல்கலாசார சமூகத்தின் பிரஜை என்ற கடமைகளும், பொறுப்புக்களும், மனித உரிமைகள் பற்றிய தெளிவு வழங்கப்படுகிறது
- மூன்றாம் தொகுதிக்குரிய விருப்புப் பாடங்களில் நவீன வேலை உலகில் பிரவேசிப்பதற்கு மிகவும் அத்தியாவசியமான தகவல் தொழிநுட்பம், உள்ளடக்கப்பட்டுள்ளமை சிறப்பம்ச மாகும். மேலும் விவசாயமும் உணவுத் தொழிநுட்பமும், வடிவமைப்பும் தொழிநுட்பவியலும், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், மனைப்பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.
- இவை தவிர பொது தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் வாரத்திற்கு ஒரு பாடவேளை கற்பிக்கப்படுகின்றது.
- எனினும் செய்முறைப் பயிற்சி பெறுவதற்குப் போதிய தொழிநுட்ப ஆய்வு கூடம் இல்லாமை இப் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இன்மை, அவற்றைத் தெரிவு செய்து கற்பதில் மாணவர்களின் ஆர்வமின்மை போன்றவை பெரும் குறைபாடாகவே உள்ளது.

## 2.3 கல்லூரி நிலைக் கலைத் திட்டம்

**கல்விசார் பாடத்துறைகள்:**

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பிரதான பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், முதன் மொழி உள்ளிட்ட ஆறுபாடங்களில் சித்தி பெறும் மாணவர் ஒருவர் கல்லூரி நிலைக் கல்விசார் பாடத்துறையை அதாவது க.பொ.த உயர்தர வகுப்பைத் தொடர்வதற்குத் தகுதி பெறுகின்றார். க.பொ.த உயர்தரக் கலைத்திட்டத்தைத் தொடர்வதற்கு மாணவர் களுக்குக் கிட்டுகின்ற பாடத் துறைகளின் அடிப்படையிலேயே கல்லூரி நிலைக் கல்வி விபரிக்கப்படுகின்றது. அது விரிவான ஆறு பாடத்துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன, கலை, வணிகம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், உயிர் முறைமைகள் தொழிநுட்பம், எந்திரவியல் தொழிநுட்பம் என்பன வாகும்.

கலைப் பாடத் துறைக்குரிய பாடங்கள் நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொகுதி ஒன்றில் சமூக விஞ்ஞான அல்லது பிரயோக சமூகவியற் கற்கைகள் சார்ந்த பாடங்கள் அடங்குகின்றன. அவற்றுள் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், தொழிநுட்ப பாடம் (சிவில் தொழிநுட்பம், மின் இலத்திரனியல் தொழிநுட்பம், தகவல் தொழிநுட்பம், விவசாயத் தொழிநுட்பம், பொறிமுறைத் தொழிநுட்பம், உணவுத் தொழிநுட்பம், உயிர்வளத் தொழிநுட்பம்) கணிதம் அல்லது இணைந்த கணிதம் எனப் பல பாடங்கள் தொழில் உலகிற்குப் பொருத்தமான பாடங்களாகவே காணப்படு கின்றன. தொகுதி நான்கில் மொழிசார்ந்த பாடங்கள் அடங்குகின்றன. மொழிசார்ந்த பாடங்கள் தொழில் உலகிற்கு வழிகாட்டக்கூடிய பாடங்களாகவே காணப்படுகின்றன. பிரெஞ்சு, ஜெர்மன், ஹிந்தி, ஜப்பானிய மொழி, அரபு, மலாய், ரஷ்யமொழி என்பன கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்களுள் ஒன்றை வர்த்தகத் துறையைச் சார்ந்த மாணவர்களும் தமது மூன்றாவது பாடமாகத் தெரிவுசெய்து கொள்ளலாம். இப்பாடங்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும், உள்நாட்டில் சுற்றுலாத் துறைசார்ந்த தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அடிப்படையாய் அமைகின்றன. வர்த்தகப் பாடத்துறையில் வணிகக் கல்வி, பொருளியல், கணக்கீடு ஆகிய பாடங்கள் உள்ளடங்கு கின்றன. இவற்றைக் கற்பதால் தனியார் துறைகளில், தொழிற் சாலைகளில், நிறுவனங்களில், வங்கிகளில், நிதி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களைப் பெற அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன.

உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறை மற்றும் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறை ஆகியவற்றில் கற்கும் மாணவர்களுக்கும் தொழில் உலகில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. எந்திரவியல் தொழிநுட்பப் பாடத்துறையைக் கற்கும் மாணவர்கள் பொறிமுறையியல் தொழிநுட்பம், தொழிநுட்பத் திற்கான விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுடனும் உயிர் முறைமைகள் தொழிநுட்பப் பாடத்துறையைக் கற்கும் மாணவர்கள் உயிர் முறைமைத் தொழிநுட்பம், தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுடன் மூன்றாவது பாடத்தைப் பொருளியல், புவியியல், மனைப்பொருளியல், ஆங்கிலம், தொடர் பாடலும் ஊடகக் கற்கையும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம், சித்திரம், வணிகக் கல்வி, விவசாய விஞ்ஞானம், கணக்கீடு, கணிதம் ஆகிய பாடங்களைக் கொண்ட பட்டியலி லிருந்து தெரிவுசெய்யலாம். கல்லூரி நிலைக் கலைத்திட்டத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக் கையைக் குறைத்துத் தொழில் உலகிற்குரிய வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காகவே தொழிநுட்பப் பாடத்துறை ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரி நிலைக் கலைத்திட்டத்தில்

தொழில்துறைக்குப் பிரவேசிப்பதற்கான திறனை வழங்கும் நோக்கில் அனைத்துப் பாடத்துறையினருக்கும் பொது ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் தரம் 12 இல் பொதுத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் GIT கற்பிக்கப்படுவதும் தொழில் உலகிற்குப் பிரவேசிக்கச் செய்வதற்கான நோக்கிலாகும்.

**தொழில்சார் பாடத்துறை:**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் இடைவிலகாது, கற்பவர் ஒவ்வொருவரும் தரம் 13 இன் இறுதிவரை தமது கல்வியைத் தொடர வழிசெய்யும் வண்ணம் 13 வருடக் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கும் கல்லூரி நிலையில், தொழில் சார் பாடத்துறை எனும் புதிய நிகழ்ச்சித் திட்டம் 2016 இல் அறிமுகம் செய்யப்பட்டது. மாணவர் தரம் 13 ஐப் பூர்த்தி செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட தொழிலுக்குரிய குறித்த திறன்களை அடைவதற்கு வழிசமைக்கும் வண்ணம் இப்புதிய பாடத்துறையின் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பாடத்துறை முன்னோடித் திட்டமொன்றாகச் செயற்படுவதோடு மாணவர்கள் தெரிவு செய்யக் கூடிய 26 தொழில்சார்ந்த திறன் பரப்புக்கள் காணப்படுகின்றன. இது தேசிய தொழில்சார் தகைமைச் சட்டகம் (NVQ) மற்றும் இலங்கை தகைமைகள் சட்டகம் (SLQF) என்பவற்றின் வழிகாட்டல்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்பு நோக்கத்திற்காக NVQ மட்டம் 3, NVQ மட்டம் 4 என்பவற்றைப் பூர்த்தி செய்தல் முறையே க.பொ.த சாதாரண தரம்,க.பொ.த உயர்தரம் சித்தியடைவதற்குச் சமனாகக் கருதப்படும். இவ்வாறு இலங்கையில் நடைமுறையிலுள்ள தேர்ச்சி மையக் கலைத் திட்டத்தில் வேலை உலகு மற்றும் தொழிற்சந்தைக்குப் பிரவேசிப்பதற்கான பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

தொடரும்...

## பல கனவுகளை சுமந்தவளாய் நான்

பல கனவுகளை சுமந்து
மலர் மலராய் மலர்ந்தவள் நான்!
காலம் செய்த சதியால்,
தனிமையின் நிழலில் நின்றவளாய் நகர்ந்தேன்.....

கண்ணீரும் சிரிப்புமாய் கனவுகள் கணத்தன.
காற்றில் மிதந்து வந்த கனவுகள் சில,
கண்ணீரில் கரைந்து கைவிட்டன.

தனிமையின் மௌனம் என்னை சூழ,
தவிப்புகள் மட்டும் இதயத்தில் ஒலித்தன.
தனிமையில் தவித்தேன்....
தரையில் விழுந்த கனவுகளை தேடி ...........

திடீரென ஒரு குரல் தந்த தகவல்: தேடிய கனவை
திருப்பித் தந்தது.
இனம் தெரியா மகிழ்ச்சி என்னை ஆர்ப்பரிக்க!
இதயத்திலே பல பட்டாம் பூச்சிகள் பறக்க!

என்னவோ, என்னை நான் அறியாமலே
தடுமாறினேன்,
சிதறிய என் சிரிப்பொலிகளின் ஓசையில்
நகர்கிறேன்.
விடியலை நோக்கிய பயணத்தில்.....

S.A.F.Amaniya
தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரி




There was a boy who dreamed of reaching the top of a great mountain. He held the reins tightly as his horse climbed the steep path. The wind was cold, and the mountain stretched endlessly before him. In his hand, he carried a small lamp, its light flickering but never going out. His goal was clear to reach the top, no matter the difficulty.

As he climbed higher, the path became rocky and uneven. The horse struggled, its hooves slipping on loose stones. The wind howled, trying to snuff out the lamp's flame. For a moment, the boy hesitated, unsure if he could continue.

"It's too dark, and the mountain is huge. We're going to struggle more," the boy said to the horse.

The horse kept walking, steady and strong. "Yes, the path is hard," it replied. "But we have the lamp. With its light, we can see what's under our feet, and that's all we need to make the next step."

The boy smiled faintly, feeling a bit more at ease. He looked down at the small light in his hand, realizing it was enough to guide him forward, one step at a time.

With courage, the boy made the next step. "One step closer," he said, moving toward his dream with hope and hard work as his guides.

In this story, the horse symbolizes hard work, and the lamp represents hope. No matter how challenging the journey, with hard work and hope, each small step brings you closer to your dreams. Even in the darkest times, the light of hope and the strength of hard work can guide you forward. The boy's journey teaches us that even when the road seems long and difficult, persistence fueled by hope and dedication leads us to our goals.

# தேசிய ஒருமைப்பாட்டிற்கும், சர்வதேச புரிந்துணர்வுக்கும் குடியியல் கல்வியின் அவசியம்

S.Logarajah
Lecturer,
Batticaloa NatiOnal College of Education

1



மனிதர்களாகிய நாம் இப்பூவுலகில் வளமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ சமாதானம் என்பது இன்றிய மையாத ஓர் அடித்தளமாக அமைந்து காணப்படுகின்றது. எப்போது ஒரு நாட்டில் போர்கள், பூசல்கள் இன்றி சமாதானம் நிலவுகிறதோ, அப்பொழுதுதான் அந்நாட்டின் பொருளாதாரம், பண்பாடு என்பவ ற்றில் வளர்ச்சி மிகுந்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து நாடு முன்னேற்றப் பாதையில் வெகு துரிதமாக இயங்கும். நாட்டின் சமாதானம் என்பது உலக சமாதானத்திற்கு முதல் படியாகும்.

தேசிய கல்வி ஆணைக்குழு 2003 ஆண்டு வெளியிட்ட தேசிய கல்வி இலக்குத் தொகுதி ஊடாகவும் இவையே எதிர்பார்க்கப் படுகின்றன.

**இலக்கு 1:** “மனித கௌரவத்தை கண்ணியப்படுத்துதல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்துதல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் சலாசார வேறுபாடுகளை அங்கிகரிப்பதனூடாக தேசத்தைக் கட்டியெழுப்புதலும், இலங்கை யர் எனும் அடையாளத்தை ஏற்படுத்துதலும்.

**இலக்கு 3:** மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர்மீது ஒருவர் கொண் டுள்ள ஆழ்ந்த இடையறாத அக்கறை உணர்வு, என்பவற்றை மேம்படுத்துவதும், சமூக நீதியும் சனநாயக வாழ்க்கை முறை நியமங்களையும் உள்ளடக்கிய சுற்றாடலை உருவாக்குதலும், மேம்படுத்துதலும்.

**இலக்கு 8:** நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமான தோர் இடத்தைப் பெறுவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய மனப்பாங்குகளையும் திறனையும் வளர்த்தல்.

இதனடிப்படையில் 2007 கலைத்திட்ட மறுசீரமைப்பில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புக்களுக்கு வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் எனும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. அதே வேளை சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் 10, 11 வகுப்புக்களுக்கு தெரிவுப்பாடங்களுள் தொகுதி 1 இல் குடியியற் கல்வியும் மக்களாட்சியும் எனும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது.

2015 கலைத்திட்ட மறுசீரமைப்பில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்பக்களுக்கு "குடியியற் கல்வி" என அந்த பாடம் மறுசீரமைக்கப்பட்டது. அதேபோல் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் 10, 11 வகுப்பக்களுக்கு தெரிவுப்பாடங்களுள் தொகுதி 1 இல் குடியியற் கல்வி எனும் பெயரில் அந்த பாடம் மறுசீரமைக்கப்பட்டு இன்று வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

## குடியியல் கல்வி பாடத்தின் தேவை

குடியியல் கல்வி என்பது குடிமக்களுக்கு அவர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் அவர்களின் அரசாங்கத்தின் செயல்பாடுகள் பற்றியும் கற்பிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. மனித சமுதாயத்தின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்தவம், தனி மனிதனின் சுய மரியாதை ஆகியவை பற்றிய கருத்துக்கள், சனநாயக ஆட்சி அதன் பண்புகள் அரசியலமைப்பு, பிரசைகளுக்குள்ள உரிமைகள் கடமைகள், சட்டம், நீதி, சர்வதேச நிறுவனங்கள் என பல்வேறு கருத்துக்கள் குடியியற் கல்வி பாடத்தினூடாகக் கற்பிக்கப்படுகின்றன.

குடியியல் கல்வியானது மாணவர்களிடையே பரந்த மனப்பாங்கினைத் தோற்றுவித்து பிற நாட்டினர் பற்றிய உண்மை அறிவை அளித்து சமூகப்பிரச்சினைகளில் உணர்ச்சிவசப்படாது நேர் சிந்தனை வழியே (Straight or Logical thinking) உண்மை நிலையை உணர்ந்து செயல்படும் மனப்பக்குவத்தை தோற்றுவிக்கிறது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சிறப்பான மனித நேய உணர்வை குடியியல் கல்வியினூடாக சிறப்பாக செயற்படுத்தலாம்.

உலக சமாதானத்திற்கு ஒரு கருவியாக இயங்க வேண்டிய குடியியல் கல்வி நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்து, நாட்டின் அபிவிருத்திற்கு உதவி, படிப்படியாக நாடுகளிடையே நல்லுணர்வை வளர்க்கும் வலுவான கருவியாக அமைந்துள்ளது.

"பூசல்கள் மக்களது மனங்களில் தோன்றுகின்றன. எனவே சமாதானத்திற்கான அரண்களும் மக்களது மனங்களிலேயே அமைக்கப்பட வேண்டும்" என்று யுனெஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய பண்பட்ட மனங்களை உருவாக்கும் சிறந்த கருவி குடியியல்கல்வி ஆகும். குடியியல்கல்வி மூலம், தங்கள் சொந்த நாட்டின் செழிப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு உறுதியளித்து, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகில் தங்கள் பங்கை அறிந்திருக்கும் எதிர்கால சந்ததியினரை நாம் வளர்க்க முடியும். இதன் காரணமாக நம்மிடையே பல்வேறுபட்ட பண்பாடுகள் இருந்தாலும் "வேற்றுமையில் ஒற்றுமை எனும் பக்குவம்" மாணவர்களிடையே வளர்க்கப்படுகின்றது.

*குடியியல் கல்வி தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் வழிகள் அடுத்த இதழில்...*

# Dhora 'WIN' வரிகள்

## கோபம்

இது முன்றெழுத்து வார்த்தை மேலோட்டமாய் பார்ப்பவர்களுக்கு முதிர்ச்சி நிலை எட்டியவர்களிடம் கேளுங்கள் இந்த மூன்றெழுத்து முழு வாழ்க்கைநிலையை மாற்றியிருக்கும்



முதிர்ச்சிநிலை என்பது வயதினை மட்டும் கொண்டு கணிக்ககூடியதல்ல. அனுபவங்களினாலும் ஏற்பட்ட முதிர்ச்சி நிலையை எட்டியவர்களிடமும் கேட்கலாம் என்றோ எதனால் என்று கூட மறந்த பின்பும் சிலர் சிலரின் முகம் பார்க்க கதை கேட்க கூச்சப்படுவோம். கோபம் தணிந்து மறந்தே போயிருக்கும் ஆனால் அந்த நொடி நாம் பேசிய வார்த்தையோ கோபத்தில் செய்த அலட்சியமோ அடிதடியோ ஏதோ ஒன்று நெருங்க நினைத்தும் அவர்களை நெருங்க விடாது இன்றுவரை உறுத்தலை ஏற்படுத்தும். அவ்வப்போது ஒரு வினாடி என் கோபத்தினை கட்டுப்படுத்தியிருக்கலாம் என அங்கலாய்க்க வைக்கும்.

கோபம் என்பது மனித உணர்வு அதனால் தான் ரௌத்திரம் பழகு என முன்னோர் கூறிச்சென்றுள்ளனர். ஆனால் அக் கோபம் பெறுமதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு அறத்தினை பாதுகாப்பதற்காக இருக்க வேண்டும்.

அத்தகைய கோபங்கள் என்றும் எம்மை எங்களிடம் கூட தலைகுனிய செய்யாது எந்தக் கோபத்தினை நீ வெளிக்காட்டி விட்டு ஓய்வெடுத்த பின்னும் உன்மனசாட்சியுடன் பேசும் போது சற்று பொறுமையாக இருந்திருக்கலாம் என உனக்கு தோன்றவில்லையோ அது மட்டுமே உனக்குரிய கோபத்தை காண்பிக்க கூடிய இடம் என்பது உனக்கு நீ நீதிபதியாகி எழுதி முடித்த தீர்ப்பு. அதன்பின்னரான உனது நியாயம் எல்லாம் உனக்கு நீயே சட்டத்தரணி வைத்து மனசாட்சி எனும் எதிர்தரப்பு வாதிக்கு காண்பிக்கும் சான்றாதாரம் ஆகும்.

தீர்ப்பின் பின் சாட்சி அவசியமற்றது தானே...

எனவே கோபமென்பது இருப்பதிலேயே மேலான உன்னதமான உணர்வு. அதனை ஊதாரித்தனமாக செலவு செய்து அதன் பெறுமதியை குறைக்காதீர்கள்.

தற்காலத்தில் Depression என்கின்ற வார்த்தை எம்மால் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. மனவுளைச்சலில் அப்படி நடந்து கொண்டுவிட்டேன் என்று சாதாரணமாக கூறிக்கடக்கின்றோம். உங்கள் நடத்தையின் விளைவைத்தாங்கி அங்கிருந்து விலகிச் செல்பவரிடம் நீங்கள் கூறும் காரணம் ஏற்புடையதாய் இல்லை என்றாலும் சில சமயம் பரவாயில்லை நான் இதைப் பெரிதுபடுத்தவில்லை எனக்கூறும் மனிதர்களை உற்றுப்பாருங்கள். அவர்களிடம் வலியின் சாரல் தெரியும் உண்மையில் அதை நீங்கள் உணரும் தருணம் நிகழ்ந்திருக்கும். எத்தகைய கடின சூழ்நிலையிலும் உங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தி உங்களை நீங்கள் வெல்ல முயலுங்கள் அதுவே உங்கள் முதல் வெற்றி.

- டயானா சிவராஜா -

# உயர்விற்கு அடிப்படை தாழ்மை


- Ladsika Mohan -

“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்” என்று அன்றே கணித்தனர் நம் முன்னோர். வெற்றி பெறவேண்டுமென்றால் விடாமுயற்சி, வேகம், விவேகம், தியாகம், தேடல், ஆன்மீகப் பற்று என்றகின்ற யாவும் எம்முள் நிலைபெற வேண்டும். இவற்றோடு யார் நம்மை என்ன சொன்னாலும் என்னால் இதனை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கை அதாவது தன்னம்பிக்கை வேண்டுமே தவிர நான் எனும் மமதையோ ஆணவமோ கூடாது. அது எம்மை ஆக்காது மாறாக அழித்து விடும்.

சுற்றத்தை ஏற்று நடக்காவிடின் முற்றுந்துறக்க வேண்டிய நிலை வந்துவிடும் என்பதை நன்கறிந்து எல்லோரையும் அண்டி வாழ வேண்டும். நாங்கள் வகிக்கும் எந்தப் பதவியும் சரி வாழும் இந்த வாழ்வும் சரி எங்கள் பணிவுக்குக் கிடைத்த பேறு என்பதைப் புரிந்து கொண்டு எம் நிலைக்குக் கீழுள்ளோரை அவம் செய்யாமல் எம் வாழ்வின் ஒரு பங்கின் பணி அவர்களால் தான் நிறைவாக்கப்படுகிறது என்பதை விளங்கி நாங்கள் இதுவரை பெறாத அன்பை மட்டுமே விதைக்க வேண்டுமே தவிர எம் சுயத்தைக் கொண்டு தற்பெருமையைப் பேசினால் இறைவன் அருளிய யாவும் சடுதியில் தவிடு பொடியாகிவிடும்.

இந்த வையகத்திலே சமத்துவம் பேணி சக உறவுகளை சமாதானத்துடன் நடத்திய தலைமைகள் தான் இன்றும் மக்கள் மனதில் நிலைத்துள்ளனர். இது என் தனிப்பட்ட வாழ்விலும் நான் கண்ட நிதர்சனமாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர், நெஞ்சத்தில் வஞ்சமின்றி பணியிலும் பணிவிலும் துணிவு கொண்டோரே ஆவர். உன்னை நம்பு ஆனால் ‘நான்’ எனும் உன் சுயத்தை நம்பாதே. ஊர்தான் எம்மை உயர்த்திப் பேச வேண்டுமே தவிர ஊரிற்கு முன்னால் என்னையே நான் உயர்த்தும் இறுமாப்பு கூடாது. பணிவாய்ப் பேசிப் பலுகிப் பெருகியவர்களையே சரித்திரம் பேசும், பாய்ந்து பழித்துரைப்போரை என்றும் ஏசும். “அன்பு அதுதானே எல்லாம்” என்று பேசித் திரிவோரெல்லாம் அன்பிற்கு அடிப்படை ஆணவமற்ற, பேராசையற்ற பெருவாழ்வே என்பதைப் புரிந்து கொண்டு சொல்லால் சொல்லித் திரியாமல் செய்து காட்ட வேண்டும்.

உயர்விற்கு அடிப்படை தாழ்மை என்று அறிந்து யாரையும் அடக்கி வாழாமல் நம்மைப் போல் பிறனையும் மதித்து வாழவேண்டும். அடக்கம் தரும் பரிசை அள்ளிச் சூடவேண்டும். இதுவே உயிர்களின் வாழ்வின் பேரானந்தம் ஆகும்.



# கலப்பு கற்றல் (Blended Learning)

பன்னீர்செல்வம் லட்சுமி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி




கலப்பு கற்றல் தொழில்நுட்பம் மற்றும் மெய்நிகர் செயற்பாடுகளை பாரம்பரிய கற்பித்தலுடன் ஒருங்கிணைக்கும் கற்பித்தல் முறை. இது உயர் கல்வியில் மதிப்பைக் கொண்டுள்ளது திட்டமிட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்துகிறது. பாரம்பரிய வகுப்பறை கற்றல் மற்றும் இணையவழி கற்றலையும் இணைக்கும் ஒரு கற்பித்தல் முறை ஆகும்.

கலப்பு கற்றலானது இணையவழி கற்றல், தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் தெளிவான கற்றல் எனவும் அழைக்கப்படும். இவ் கலப்பு கற்றல் ஆங்கிலத்தில் Blended Learning (B – Learning) என்றும் அழைக்கப்படும். மாணவர்கள் பயிற்றுவிப்பாளர், பௌதீக வகுப்பறை மற்றும் இணையதளம் மூலம் தொடர்பு கொள்கின்றார்கள். அத்தோடு, கலப்பு கற்றலானது ஆசிரியர், மாணவர்களின் முடிவுகளை பரிசோதிக்க அனுமதிக்கும் ஒரு வழியாகும். ஆசிரியர்கள், மாணவர்களுடன் தொடர்ந்தும் தொடர்பு கொள்கின்ற மன்றங்கள், நேரடி செய்திகள், தொலைபேசி அழைப்புகள் மூலம் மாணவர்களால் முன்வைக்கப்படும் சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் தீர்க்கப்படுகின்றன.

## புரட்டப்பட்ட கற்றலின் பரிணாமம் கலப்பு கற்றல்

புரட்டப்பட்ட கற்றல் செயல் விசாரணை மற்றும் கூட்டுக் கற்றலை ஊக்குவிக்கிறது. இந்த மாதிரியானது மாணவர்கள் வீட்டில் ஒரு தலைப்பை படிக்கவும், பாடசாலைக்குச் செல்லவும், விவாதத்திற்கு தயாரிக்கவும், அவர்களது சந்தேகங்களை பகிர்ந்து கொள்ளவும் யோசனைகளை வழங்கவும், வகுப்பறை செயலில் பங்கேற்பவர்களாகவும் இருக்க அனுமதிக்கிறது.

## கலப்பு கற்றல் வகைகள்

- ஆய்வக சுழற்சி கலந்த கற்றல் (Laboratory Cyclone Learning)
- நிலைய சுழற்சி கலந்த கற்றல் (Station Cycle Mixing Learning)
- தொலைநிலை கலந்த கல்வி (Remote Of Educational)
- நெகிழ்வு கலந்த கற்றல் (Flexible Education)
- புரட்டப்பட்ட வகுப்பறை (The Flipped Classroom Learning)
- தனிப்பட்ட சுழற்சி கலந்த கற்றல் (Personal Cycle Mixed Learning)
- திட்ட அடிப்படையிலான கலப்பு கற்றல் (Project Based Mixed Learning)
- சுய இயக்கம் கலந்த கற்றல் (Self -Movement Mixed Learning)
- உள்ளே வெளியே கலந்த கற்றல் (Learn To Be Mixed Out)

- வெளியில் கலந்த கற்றல் (Learning Outdoors)
- துணை கலப்பு கற்றல் (Auxiliary Learning)
- கலப்பு தேர்ச்சி அடிப்படையிலான கற்றல் (Mixed -Based Learning)

## கலப்பு கற்றல் வீதம்

கலப்பு கற்றல் வீதம் என்பது ஒரு நிறுவனம் அல்லது குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நடைபெறும் கற்றல் செயற்பாட்டில், நேரடி வகுப்பறை கற்றல் மற்றும் இணையவழி கற்றல் ஆகிய இரண்டையும் எந்த அளவுக்கு இணைந்துப் பயன்படுத்துகின்றார்கள் என்பதை குறிக்கும் ஒரு அளவீடு ஆகும்.

**உதாரணம்:-** ஒரு பாடசாலையில் வாரத்திற்கு மூன்று நாட்கள் மாணவர்கள் நேரடி வகுப்பில் கலந்து கொண்டு மீதமுள்ள இரண்டு நாட்கள் இணையவழி மூலம் பாடங்கள் கற்கின்றனர். என்றால் அந்த பள்ளியின் கலப்பு கற்றல் 60% என்று கூறலாம்.

## கலப்பு கற்றல் ஏன் முக்கியம்

- மாணவர்கள் தேவைகளை பூர்த்தி செய்தல். ஒவ்வொரு மாணவரின் கற்றல் முறை வேறுபட்டிருக்கும். கலப்பு கற்றல் மாணவர்கள் தங்களுக்கு ஏற்றவாறு கற்கும் வாய்ப்பை வழங்குகிறது.
- கற்றல் திறனை மேம்படுத்தல். நேரடி வகுப்பறையில், online மூலம் சந்தேகங்களை தெளிவுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதோடு online மூலம் தங்களுக்கு தேவையான பகுதிகளை மீண்டும் மீண்டும் பார்த்து கற்கும் வாய்ப்பு கிடைக்கும்.
- தொழில்நுட்ப திறனை மேம்படுத்தல். இணையவழி கற்றல் மூலம் மாணவர்கள் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தும் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம்.
- கொரோனா போன்ற சூழ்நிலைகளில் தொடர்ச்சியான கற்றலை பெறல். நேரடி வகுப்பறையில் நடைபெற முடியாத சூழ்நிலை களில் இணையவழி கற்றல் மூலம் கல்வி தொடர்ச்சியாக நடைபெறும்.

## கலப்பு கற்றல் முக்கிய அம்சங்கள்

**நெகிழ்வான கற்றல் :** மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற நேரத்தில் மற்றும் இடத்தில் கற்றுக்கொள்ள முடியும்.

**தனியாக்கப்பட்ட கற்றல் :** ஒவ்வொரு மாணவரின் தேவைகளு க்கும் ஏற்ப கற்றல் பொருட்கள் மற்றும் செயற்பாடுகளைத் தேர்வு செய்யலாம்.

**பல்வேறு கற்றல் முறைகள் :** Video, Audio உரையாடல்கள் செயல்பாடுகள் போன்ற பல்வேறு கற்றல் முறைகள் பயன்படுத்தப் படுகின்றன.

**ஆசிரியர், மாணவர்கள் தொடர்பு :** ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நேரடி வழிகாட்டிகள் மற்றும் ஆதரவை வழங்குகிறது.

## கலப்பு கற்றல் நன்மைகள்

- மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கிறது. பல்வேறு கற்றல் முறைகள் மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கிறது.
- கற்றல் முடிவுகளை மேம்படுத்துகிறது. தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மாணவர்களின் கற்றல் முடிவுகளை மேம்படுத்துகிறது.
- நேரத்தை சேமிக்கிறது. மாணவர்கள் தங்களது சொந்த வேகத்தில் கற்றுக்கொள்ளலாம். இது நேரத்தை சேமிக்கிறது.
- கற்றல் செலவுகளை குறைக்கிறது. இணையவழி கற்றல் செலவுகளை குறைக்கிறது என்று.

## கலப்பு கற்றல் சவால்கள்

1. **தொழில்நுட்ப பிரச்சினைகள்.**
   - இணைய இணைப்பு பிரச்சினைகள்.
   - தொழில்நுட்ப கோளாறுகள்
   - மென்பொருள் பயன்பாட்டில் சிக்கல்.
2. **மாணவர்கள் மாறுபட்ட திறன்கள்.**
   - தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் சிரமப்படும் மாணவர்கள்.
   - சுய கற்றலில் ஆர்வம் இல்லாத மாணவர்கள்.
   - வெவ்வேறு கற்றல் வேகத்தைக் கொண்ட மாணவர்கள்.
3. **ஆசிரியர்களின் தயார் நிலை.**
   - தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்பிப்பதில் சிரமப்படும் மாணவர்கள்.
   - கலப்பு கற்றல் முறையை செயல்படுத்துவதற்கான பயிற்சி அற்ற ஆசிரியர்கள்.
4. **சமூக தொடர்புகளின் குறைவு .**
   - நேரடி வகுப்பறையில் கிடைக்கும் சமூக தொடர்புகள் இணையவழி கற்றலில் குறைவாக இருக்கும்.
5. **வீட்டுச் சூழல்.**
   - அனைத்து மாணவர்களுக்கும் போதுமான வீட்டுச் சூழல் கிடையாது. குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவு இல்லாத நிலை.

## கலப்பு கற்றல் தொடர்பான சவால்களை எவ்வாறு சமாளிப்பது

- தொழில்நுட்ப ஆதரவு
- மாணவர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
- தனிப்பட்ட கற்றல்
- சமூக தொடர்புகளை ஊக்குவித்தல்
- வீட்டுச் சூழலை மேம்படுத்தல்

## கலப்பு கற்றலை வெற்றிகரமானதாக்கும் சில காரணிகள்

**மாணவர்களுக்கான தயாரிப்பு**

- தொழில்நுட்ப திறன். மாணவர்கள் இணையவழி கருவிகளை பயன்படுத்துவது என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- சுய கட்டுப்பாடு. கலப்பு கற்றலில் மாணவர்கள் தங்கள் கற்றல் வேகத்தில் செயல்பட வேண்டும். எனவே சுய கட்டுப்பாடு அவசியம்.
- தொடர்பு – மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும்.

**ஆசிரியர்களுக்கான தயாரிப்பு**

- தொழில்நுட்ப அறிவு – ஆசிரியர்கள் இணைய கருவிகளை திறம்பட பயன்படுத்துவதற்கு தெரிந்திருக்க வேண்டும்.
- பாடத்திட்ட வடிவமைப்பு – கலப்பு கற்றலுக்கான பாடத்திட்டத்தை கவனமாக வடவமைக்க வேண்டும்.
- மாணவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்குதல் வேண்டும்.

## கலப்பு கற்றல் வெற்றிக்கு உதவும் காரணிகள்

- தனியாக்கப்பட்ட கற்றல். ஒவ்வொரு மாணவரின் தேவைகளுக்கும் ஏற்ப கற்றல் அனுபவத்தை தனிப்பயனாக்க வேண்டும்.
- தொடர்பாடல் :- ஆசிரியர் மாணவர் மற்றும் பெற்றோர் ஆகியோர் தொடர்பில் இருப்பது முக்கியம்.

- மதிப்பீடு:- மாணவர்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து மதிப்பீடு செய்ய வேண்டும்.
- தொழில்நுட்ப உள்கட்டமைப்பு :- நல்ல இணைய இணைப்பு மற்றும் தேவையான கருவிகள் இருப்பது அவசியம்.

**அறிஞர்களின் கருத்துக்கள்**

**மைக்கேல் ஹார்ன்**

கல்வி நெட்வொர்க்கை மாற்றுவதற்கு கலப்புக் கற்றல் சிறந்தது என்றும். விமர்சனமான சிந்தனைக்களை உருவாக்கும்.

**லாங்கோ**

இ- புத்தகங்கள், விளையாட்டுகள், வீடியோ படங்கள் மற்றும் டைனமிக் லேர்னிங் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.




## மேயும் ஆடுகள்

மாமிசம் புசிக்கும் மிருகம் போல
மனிதம் இழந்தவனின் மானமற்ற ஆசை
காரிகையின் கண்களுக்குள்
கண்ணீரின் கடலோசை

செய்யும் செயலில் வேற்றுமை
உடுக்கும் உடையில் கட்டுப்பாடு
போகும் வழியில் தடைகள்
பேசும் வார்த்தையில் கவனம்
உரைக்கும் குரலில் இறக்கமென
பெண்ணுக்குள் புதைந்தே கிடக்கிறது
சொல்லொண்ணா புழுங்கல்கள்

மேற்குலக கலாச்சாரத்தில்
நாகரிகம் இல்லையென
காவியுடையில் சிறைப்படுத்தியுள்ள
கலாச்சாரத்திற்குள் தூங்கி போகிறது
பெண்ணவளின் சுதந்திரமும்
வஞ்சக விலங்கதுவும் வளைத்துக்
கொள்கிறது
வளையல் ஏந்தும் வஞ்சியின்
கைகளை



ஆடைகளை மட்டுமே
குறை கூறும் சமூகத்தில்
ஐந்து வயது பிஞ்சின்
தவறென்ன?
ஆயிரமாயிரம் வேலிகளிட்டும்
பெண்களை மேயும்
ஆடுகள் முளைப்பதெங்கே?

- ராஜா மதுஷாலனி -

# வடக்கு மோனாலிசா

- குமுதுனி பிரியங்கா நாகஹவத்த -



கலையின் மாய உலகில் சில படைப்புகள் காலம் கடந்தும் புகழ்பெற்றவை. அத்தகைய ஓவியங்களில் ஒன்றாக விளங்குவது ஜோஹான் வெர்மிரின் (Johannes Vermeer) "முத்துத் தோட்டுடனான சிறுமி" (Girl with a Pearl Earring) ஓவியம். 1665ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த ஓவியம், 17ஆம் நூற்றாண்டின் நெதர்லாந்து தங்க யுகத்தின் (Dutch Golden Age) சிறந்த ஓவியமாகப் போற்றப்படுகிறது. இது கன்வஸ் துணியில் எண்ணை வர்ணத்தால் வரையப்பட்டதாகும்.

## ஓவியத்தின் சிறப்பம்சங்கள்

வெர்மிர் தனது ஓவியங்களில் ஒளியின் மாஸ்டர் எனப் போற்றப்படுகிறார். இதில், ஒரு இளம் பெண் நீலம் மற்றும் மஞ்சள் நிறத் துணியை தலையில் கட்டியவாறு, பட்டுத் துணியால் அலங்கரிக்கப்பட்டு, தனது தோள்களைச் சிறிது திருப்பியபடி பார்க்கும் தோற்றத்தில் இருக்கிறார்.

பெண்ணின் காதில் காணப்படும் பெரிய முத்துத் தோடு ஓவியத்தின் மையக் கணுக்காலியாகும். ஒளி, நிழல், முகவியலில் அமைதியான நம்பிக்கை மற்றும் கண்ணோட்டத்தில் காணப்படும் இரகசியம், இதனை காலமற்ற ஓவியமாக ஆக்கியுள்ளது.

## ஒளி விளையாட்டு

வெர்மிர் தனது ஓவியங்களில் ஒளியின் தன்மையை நுட்பமாக சித்தரிப்பதில் புகழ்பெற்றவர். முகத்தில் விழும் மென்மையான ஒளி, கண்களில் வீசும் பிரகாசம், மற்றும் முத்துத் தோடு பிரதிபலிக்கும் ஒளிச்சேர்க்கை ஓவியத்திற்கு உயிரூட்டுகின்றன. மேலும், இதில் நீலம் மற்றும் சிவப்பு போன்ற குளிர்ந்த நிறங்களின் உபயோகம் ஓவியத்தின் அழகை பெருக்குகிறது.

## ஓவியத்தின் கருப்பொருள் மற்றும் இரகசியம்

இந்த ஓவியம் ஒரு சாமான்ய பெண்ணின் அழகை மட்டுமல்லாது, ஒரு மாயத் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. பெண்ணின் பார்வை நேரடியாக பார்வையாளரை சந்திக்கும் போது, இது ஓவியத்துக்குள் அவர்களை ஈர்க்கிறது. அது மட்டுமல்லாது, இது லியனாடோ டாவின்சியின் மோனாலிசா ஓவியத்தைப் போன்று மந்திரப் புன்னகையுடன் வட ஐரோப்பிய நாடான நெதர்லாந்தில் காணப்படுவதால் இதனை "வடக்கு மோனாலிசா" எனச் சிலர் அழைப்பதும், அதன் மறைமுகமான இரகசியத்தன்மையால் ஆகும். பெண் யார்? ஏன் திரும்பிப் பார்க்கிறார்? போன்ற கேள்விகள் பார்வையாளர்களை ஆழமான சிந்தனையில் ஆழ்த்துகிறது.

## ஓவியரின் நோக்கம்

வெர்மிர் இந்த ஓவியத்தை வரைந்த நோக்கத்திற்கான சரியான வரலாற்று ஆதாரம் இல்லை. ஆயினும், சில கருதுகோள்கள் முன்வைக்கப்படுகின்றன:

- **ஒளி மற்றும் நிழல் ஆராய்ச்சி :** வெர்மியர் தனது ஒளிச் சேர்க்கை, முகப்பரப்பு மற்றும் பொருள்களின் வெளிச்ச விளையாட்டை சோதிப்பதற்காக இதை உருவாக்கியிருக் கலாம்.
- **Tronie ஓவியம் :** இது ஒரு Tronie (உருவப்படம் அல்ல, ஒரு முகபாவனையை ஆய்வு செய்யும் ஓவிய வகை) ஓவியமாக இருக்கலாம்.
- **அழகிய வடிவம் :** மனித அழகின் நேர்த்தியை வெளிப் படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டிருக்கலாம்.
- **வணிக நோக்கம் :** 17ஆம் நூற்றாண்டில் ஓவியங்களை வணிக ரீதியாக விற்பனை செய்வது வழக்கமாக இருந்தது. எனவே இது வணிக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டிருக் கலாம்.

## விமர்சனங்கள்

இந்த ஓவியம் தொடர்பாக பல கலை விமர்சகர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

- **ஒளி மற்றும் நிழலின் அழகு :** பிரெஞ்சு விமர்சகர் டி. ஹெல்போட், "வெர்மிர் ஒளியின் கலைஞர்" என்று பாராட்டினார்.
- **பெண்ணின் பார்வை :** கலை விமர்சகர் ஜோனாதன் ஜோன்ஸ் (The Guardian) இதனை "அமைதியான தோடு, இரகசியத் துடன் கூடிய பார்வை" என வர்ணித்தார்.
- **முத்துத் தோட்டின் முக்கியத்துவம் :** கலை ஆய்வாளர் ஸ்பென்சர் ஃபெல்ட்மன், "முத்துத்தோடு வெர்மிரின் நுட்பத்திற் கான சிகரம்" எனக் கூறினார்.
- **நிறப் பயன்பாடு :** வெர்மியர் பயன்படுத்திய லேப்பீஸ் லாஸுலி (Lapis Lazuli) என்ற நீல நிறம், ஓவியத்தின் மதிப்பை மேலும் உயர்த்தியுள்ளது.

## கலை உலகில் ஓவியத்தின் தாக்கம்

இவ்வோவியம் மனித அழகின் வெளிப்பாடு, ஒளி-நிழலின் உந்துதல், இரகசியத்தன்மை மற்றும் உணர்வின் அழகிய சமநிலையை கொண்ட ஓவியமாக இன்றும் கவனத்தை ஈர்க்கிறது.

வெர்மிரின் சிறந்த படைப்பாக விளங்கும் "முத்துத் தோட்டுடனான சிறுமி" ஓவியம், பார்வையாளர்களுக்கு தனித்துவ மாக காட்சியளிப்பதோடு, அதன் இரகசியத்தன்மையால் பல தலைமுறைகளுக்கும் பேராதரவை பெற்றுள்ளது.

## கதை வழி அற மொழி

திரு. ம. நிரேஸ்குமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it




☞ Click Here for Watch it

நன்றி : DAN தமிழ் ஒளி




## வீர திருநாள்

கால் கடுக்க தோல் கறுக்க வயலில்
நமக்காக உழைத்தவர்களுக்கான நாள்
அன்று நம் ஈழத்தமிழரின் கண்ணீருடன் கூடிய கதறல்
சந்தோஷமான குலவை ஆகிய நாள்

துப்பாக்கி சத்தத்திற்கும் கேட்கும் பீரங்கி வெடிப்பிற்கும் பயந்தவர்களின்
பயத்தை போக்கி அதே சத்தத்தை சந்தோஷம் ஆக்கியநாள்
உலகில் உள்ள அனைத்து தமிழ் நெஞ்சங்களும்
வருடத்தை ஆரம்பிக்கும் வீர தமிழரின் பொங்கல் பெருநாள்

*- தர்சனா சிவலிங்கம் -*

## தமிழ்த் திருநாளாம் தைத்திருநாள்

தமிழன் வீரமும் விவசாயமும் - உன் எதிரவன்
கைக்குள் வசப்படும் முன்பே
அக்கினி ஆதவன் தன் ஆசியினைப் பெற்று - உன்
கைதூக்கி விலங்குடைக்க சொல்லும் - தையின்
தமிழ் திருநாளாம் தைத்திருநாள் வந்ததோ இன்று...

தேசமெங்கும் தேடி பசிதீர்க்கும் பஞ்சன் - நானும்
வீரம் விடுத்து விவசாயம் பார்க்கும் - என்
மகனுக்கோர் பொங்கல் அளித்திடும் முன்பே
பொங்கலோடு பழமும் தையொரு பொழுதில் ருசித்து விட்டுப்போ...

*- ர.சுஜிபன் -*

## பொங்கலோ பொங்கல்

சனநாயகப் பெயரில் சட்டங்களை விளங்காக்கி
சுதந்திர கரங்களை சங்கிலிகளின் உணவாக்கி
மக்களின் இரத்தம் பிளிந்து உடலை விறகாக்கி
ஆட்சித் தீயில் நாட்டை இரையாக்கும் நிலைமாற்ற
பட்டுடை மாந்தர்களின் புலித்தோல் கிழித்தெறிய -
விடிவெள்ளியாய் வந்துதித்த உழவனின் உன்னதம்
உணர்ந்த ஒரு நாள்...


அவன் விதைத்துதித்த மணிகளை அள்ளி
வெல்லம் சர்க்கரை சேர்த்து - கதிரவன்
வந்து மெல்ல காரிருள் தளர்த்த
உரக்கச் சொல்.....
பொங்கலோ பொங்கல்!!
பொங்கலோ பொங்கல்!!

*- A.R. முகமட் ரியாஸ் -*

# பேசும் படங்கள்



Art by. காந்தராஜன் பிரதீபா
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



Art by. M.J.F. Nasma


குருசேத்திரம்
කුරුසේත්තිරම්
Guruseththiram
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...
"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
சிறுகதை
தொடர்கதை
கட்டுரை
கவிதை
ஓவியங்கள்
தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.
சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.
சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)
குருசேத்திரம் உங்களின் களம்...
அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
guruseththiram@gmail.com
www.guruseththiram.blogspot.com
Click Here
– குருசேத்திரம் குழுமம் –